**இலங்கை நீதிபதிகளின் நிறுவனம் - 2018**

---------------------------------------------------------

இலங்கை நீதிபதிகளின் நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---------------------------------------------------------

2018 இன் 19 தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 16(1) பிரகாரம் அனைத்து கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பில் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்குமுடியுமான வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனம் தொடர்பிலும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கப்படக்கூடிய காலப்பகுதியினுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான காலப்பகுதியினுள் தயாரிக்கப்படுகின்றமை இடம்பெறுவதாக சான்றுபடுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமான கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்கு உரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறான போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புகள்**

---------------------------------------------------------

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---------------------------------------------------------

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| **(i)** | **நிதிப்பிரமாணம் 261(1) மற்றும் 261(2)** | 2018 திசெம்பர் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கோவையின் (பக்க இல. 1 முதல் 208 வரை) மற்றும் நவம்பர் | நிறுவனத்தில் முன்னர் நிரந்தரமான கணக்காளர் ஒருவர் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அனைத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கோவையின் (பக்க இல. 1 முதல் 150 வரை) அனைத்து கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கும் உரிய இடங்களில் உறுதிச்சீட்டு இலக்கம் மற்றும் காசோலை இலக்கம் இடப்பட்டிருக்கவில்லை. | இல்லாதிருந்தமையின் அடிப்படையில் குறித்த உறுதிச்சீட்டுக்கள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிராதது டன், எதிர்காலத்தில் உரிய முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். | உறுதிச்சீட்டுகளிலும் உரிய இடங்களில் உறுதிச்சீட்டு இலக்கம் மற்றும் காசோலை இலக்கம் இடப்பட்டிருக்க வேண்டும். |
| **(ii)** | **நிதிப்பிரமாணம் 396(ஈ)** | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வங்கி இணக்கக்கூற்றின் விபரங்களின் அடிப்படையில் ரூபா 16,924 பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் முன்னர் நிரந்தரமான கணக்காளர் ஒருவர் இல்லாதிருந்தமையின் அடிப்படையில் அதில் பிரச்சினைக்குரிய நிலமையொன்று உருவாகியிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| **(ஆ)** | **அரச நிதி சுற்றறிக்கைகள்** | | | |
| **(i)** | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை | செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தினை தயாரிக்கும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராதது டன், எதிர்காலத்தில் அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| **(ii)** | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை. | செயல்நிமித்த முற்பண பணிகள் நிறுவனத்தினுள் இடம்பெற்றுள்ளதா என்பதை நிறுவனத்தினால் பேணப்படும் முற்பணப் பதிவேட்டின் மூலம் அவதானிக்க முடியாதிருந்தது. | நிரந்தரமான கணக்காளர் ஒருவர் இல்லாதிருந்தமையின் காரணத்தால் அதில் பிரச்சினைக்குரிய | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

நிலமையொன்று உருவாகியிருந்தது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் அவ்வாறான பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

## 2.2 செயற்படுதன்மை மற்றும் மீளாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மாவட்ட நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், குற்றவியல் நடுவர்கள், தொழில் நியாய சபையின் தலைவர், க்வாசி நீதிபதிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் ஆகியோருக்காக 25 பயிற்சி கூட்டங்கள் மற்றும் 49 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 20 பயிற்சி செயலமர்வுகள் மற்றும் 13 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அத்துடன், செயல்நடவடிக்கை திட்டத்தின் 4 ஆம் பந்தியின் நோக்கம் 06 மற்றும் 07 எனுமாறு குறிப்பிடப்பட்டிருந்த நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்களுக்காக திட்டமிடப்பட்ட 16 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டளவில் நீதிபதிகளின் கேட்போர் கூடத்தின் கூரையில் புறாக்கள் பெருகியதால் அதிக துர்நாற்றம் வீசியமையின் காரணத்தால், செயலமர்வுகளை நடாத்த முடியாதிருந்தது. அந்த காரணத்தால் ஆண்டிற்குரியதாக நடாத்தப்பட வேண்டிய குறித்த பயிற்சித்திட்டங்கள் நடாத்த முடியாதிருந்தது என்பதை தெரிவிக்கின்றேன். | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 முகாமைத்துவ செயற்பாடுகள்**

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பேரேடு மற்றும் நாளேட்டுக் குறிப்புகளை பேணிச் செல்லப்பட்டிராமையால் நிறுவனத்தின் நிதி செயலாற்றல் தொடர்பில் திருப்திகொள்ள முடியாதிருந்தது. | 2018 ஆம் ஆண்டளவில் நிறுவனத்தில் நிரந்தரமான கணக்காளர் ஒருவர் இல்லாதிருந்தமையால் இவ்வாறான பிரச்சினைகள் உருவாகியிருந்ததுடன், எதிர்காலத்தில் அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | கணக்கு அறிக்கைகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டு குறித்த கொடுக்கல் வாங்கல்கள் சரியாக பதிவு செய்யப்பட்டு கணக்குகள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் வருடாந்த மூலதன ஏற்பாடு ரூபா 6 மில்லியனாக இருந்ததுடன், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செலவினம் ரூபா 0.22 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி செயன்முன்னேற்றம் 3.65 சதவீதம் ஆனமையால், மூலதன நிதியேற்பாட்டு பயன்பாடு மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | மீளாய்வாண்டின் மூலதன நிதியேற்பாடு 06 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான செலவினம் ரூபா 0.22 மில்லியன் கீழ்வரும் காரணங்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>**வாசிகசாலை புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு.**<br>எதிர்பார்த்த போதிலும், 2018 ஆம் ஆண்டளவில் மேள் தளத்தின் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்வதற்காக வாசிகசாலையை அந்த இடத்திலிருந்து அகற்ற உத்தேசித்திருந்த காரணத்தால் புத்தகங்களின் கொள்வனவு இடம்பெற்றிருக்கவில்லை.<br><br>**அச்சீட்டு இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு**<br>உத்தேசித்திருந்த போதிலும், நீதிபதிகளின் கேட்போர் கூடத்தின் கூரையில் அப்போது புறாக்கள் பெருகியிருந்தமையால் வார இறுதி செயலமர்வுகளை நடாத்த முடியாதிருந்தது. | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது அவற்றை நிறைவேற்றுவதற்கு உள்ள இயலுமையும் கருத்திற்கொள்ளப்பட வேண்டியதுடன், நிதியேற்பாட்டில் பணத்திற்கு பெறுமதி ஏற்படும் வகையில் பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இதன் காரணமாக புதிய அச்சீட்டு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>**தளபாடங்கள் மற்றும் புத்தகங்களை கொள்வனவு செய்தல்** இடம்பெறாமை மேல் தளத்தின் கூரை புதுப்பிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவிருந்தமை காரணத்தால் செயலமர்வுகள் இடம்பெறாமை.<br>2018 ஆம் ஆண்டளவில் மேல் தளத்தின் கேட்போர் கூடத்தின் மற்றும் வாசிகசாலையின் புதுப்பித்தல் பணிகளுக்காக இராணுவம், கடற்படை ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. பின்னர் நீதிமன்ற அமைச்சினூடாக பழுதுபார்த்தல்கள் ஆரம்பிக்கப்பட்டது.<br>**தற்போதைய நிலைமை: (தற்போது பணிகள் நிறைவடைந்தவாறு காணப்படுகின்றது.)** | |

**2.4 பதவியணி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 24 மற்றும் உள்ளபடியான பதவியணி 13 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 11 ஆகும். வெற்றிடஙகளின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 46 சதவீதம் ஆகும். வெற்றிடமாக காணப்பட்ட பதவிகளிடையே நிறுவனத்தின் பணி மற்றும் செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்காக நேரடியான பங்களிப்பினை வழற்கும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், உதவி கணக்காளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஆகிய பதவிகள் ஆகும். | 2018 ஆம் ஆண்டளவில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும், தற்போதைய நிலைமைக்கமைய அனைத்து வெற்றிடங்களுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றேன். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |